KEMENTERIAN SUMBER MANUSIA

# "KERATAN AKHBAR KESUMA"

## AHAD
## 2 November 2025

| Akhbar | Makkal Osai |
|---|---|
| Tarikh | 2 November 2025 |
| Ruang | National |
| Muka Surat | 3 |





# தொழிலாளர்களுக்கு முழு நேரமும் பாதுகாப்பு

## மடானி அரசாங்கத்தின் புதிய வியூகம்

கோலாலம்பூர், நவ. 2-

கடந்த 2018 தொடங்கி 2025 ஆகஸ்டு 31ஆம் தேதி வரை விபத்துகளுக்கான கிட்டத்தட்ட 30 ஆயிரம் இழப்பீட்டுக் கோரிக்கை மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் இவை வேலையிட விபத்து அல்ல என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இவற்றுள் 7 விழுக்காடு விபத்துகள் வேலை நேரத்திற்குப் பிறகு நிகழ்ந்திருக்கின்றன. கடந்த ஆண்டு உற்பத்திப் பிரிவு ஊழியர் ஒருவர் விபத்தில் வலது கையில் எலும்பு முறிவுக்கு ஆளானார். வேலை இடத்தில் இருந்து தன் மனைவியை அழைத்து வந்தபோது இவர் விபத்தில் சிக்கி இருக்கிறார்.

ஆகவே இது வேலையிட விபத்து அல்ல என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏனெனில் சம்பந்தப்பட்ட அந்தத் தொழிலாளர் தன் சொந்தப் பணிக்காகச் சென்றபோது இந்த விபத்து நேர்ந்திருக்கிறது என்று பதிவாகி இருக்கிறது.

இதேபோல் தொழில்நுட்பாளர் ஒருவரும் பாதிக்கப்பட்டிருக்கிறார். இவர் இரவு 10.00 மணி வரை மிகைநேர வேலை செய்துவிட்டு வீடு திரும்பியபோது ஏற்பட்ட விபத்தில் இடது கால், வலது கை, இடுப்பு ஆகியவற்றில் காயமடைந்ததோடு பற்களும் உடைந்திருந்தன.

வீடு திரும்பிய வழியில் இவர் உணவுக் கடைக்குச் சென்றிருக்கிறார். அதன் பின்னர் அங்கிருந்து வீட்டுக்கு வரும் வழக்கமான சாலையைப் பயன்படுத்தாமல் வேறொரு வழியாகச் சென்றபோது விபத்து நேர்ந்திருப்பது அவர் சமர்ப்பித்த விபத்து வரைபடத்திலும் போலீஸ் புகாரிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் இதுவும் வேலைஇட விபத்து அல்ல என்றும் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இப்போதெல்லாம் அலுவலகத்தில் இருந்துதான் வேலை செய்ய வேண்டிய நிலை இருப்பதில்லை. அதிகமான தொழிலாளர்கள் வீட்டிலிருந்தும் கேஃபே போன்ற இடங்களிலும் இருந்தும் வேலைக்கு வரும் வழியிலும் வேலை செய்கின்றனர்.

ஆனாலும் தொழிற்சாலையிலும் சரி, அலுவலகக் கட்டடத்திலும் சரி, வேலை மீதான நெருக்குதலும் நெருக்கடியும் என்றுமே ஒரு முடிவுக்கு வந்ததில்லை என்பதும் தெரிய வந்திருக்கிறது.

இதை உணர்ந்துள்ள மடானி அரசாங்கம் ஒரு மிகப்பெரிய

PERKESO

நடவடிக்கையை எடுத்திருக்கிறது. தொழிலாளர்களுக்கு இன்னும் பாதுகாப்பான, நிறைவான பாதுகாப்புத்தன்மை கொண்ட தாக்குப்பிடிக்கும் தன்மை கொண்ட



## 10 மில்லியன் பேர் பயனடைவர்

நடவடிக்கையைச் செயல்படுத்தி இருக்கிறது.

மனிதவள அமைச்சர் ஸ்டீவன் சிம் தலைமையில் இந்த நடவடிக்கை கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது தொடர்பான ஒரு புதிய தீர்வுக்கான நடவடிக்கையுடன் நாடாளுமன்றத்திலும் அவரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதுதான் லிண்டோங் 24/7 எனப்படும் வேலையிட விபத்து அல்லாத பாதுகாப்புத் திட்டம்.

சொக்சோ எனப்படும் சமூகப் பாதுகாப்பு அமைப்பின் கீழ் தொழிலாளர் பாதுகாப்பு புதிய திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டமானது நாடு முழுவதும் 10 மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும். முழு நேரமாக அவர்களுக்கு இந்தப் பாதுகாப்பு கிடைக்கிறது.

வேலை செய்யும்போதும் சரி, விடுமுறையில் இருக்கும்போதும் சரி, தனிப்பட்ட விஷயங்களுக்காகச் செல்லும்போதும் சரி, இது எல்லா நேரத்திலும் பாதுகாப்பு அளிக்கிறது. ஆகவே ஒரு விபத்து வேலை நேரத்தில் நிகழ்ந்ததா, இல்லையா என்ற கேள்விக்கும் இது முற்றுப்புள்ளி வைக்கிறது.